## கேள்வி:

# "புதிய ஏற்பாட்டின் சபை ஆசாரியர்களைக் கொண்டதா?"

## பதில்:

வேதாகமத்தில் உள்ள முக்கிய கருப்பொருள்களில், "ஆசாரியத்துவம்" என்று அழைக்கப்படுவதும் ஒன்று ஆகும். இந்தக் கருப்பொருள் பழைய மற்றும் புதிய ஏற்பாடு முழுவதும் விரவியுள்ளது. இந்தக் கருப்பொருளை நாம் சற்று நெருக்கமாகக் காண்போம்.

### *பழைய ஏற்பாடு (எதிர் நிலையில்) புதிய ஏற்பாடு*

*பழைய ஏற்பாட்டில் ஆசாரியத்துவம் அனைவருக்கும் உரியதல்ல. இஸ்ரவேலர்கள் அனைவரும் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆரோனும், அவருடைய மகன்களும், அவருடைய பேரப்பிள்ளைகளும் "அவர்களின் ஆசாரியத்துவத்தைக் காத்துக்கொள்ள" வேண்டியிருந்தது, ஆசாரிய ஊழியம் செய்வதற்கு முற்படும் சாதாரண மனிதன் ''கொலை செய்யப்பட'' வேண்டியிருந்தது (எண். 3:10).*

*பழைய ஏற்பாட்டிற்கே உரிய இந்தத் தனித்தன்மை, புதிய ஏற்பாட்டின் பாகமாக இல்லை. மாறாக, "கிறிஸ்தவர்" (1 பேது. 4:16) என்ற பெயரை அணிந்த அனைவரும், அவர்களைப் படைத்தவரால் பரிசுத்த ராஜரீக ஆசாரியக் கூட்டம் என்று கனப்படுத்தப்படுகின்றனர். இயேசுவின் மூலமாக, அவரது சபையின் உறுப்பினர்கள், தேவனுக்குப் பிரியமான "ஆவிக்கேற்ற," (சொல்லுக்கேற்றதல்ல) பலிகளைச் செலுத்துகின்றனர் (1 பேது. 2:5, 9). அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுவை, ''நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய*

*பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக ஆமென்" (வெளி. 1:6) என்று துதித்தார்.*

*அடிக்கப்பட்ட, ஆனால் உயிர்த்தெழுந்த ஆட்டுக் குட்டி யானவரைப்பற்றி யோவான் புகழ் பாடல் ஒன்றையும் பதிவு செய்துள்ளார், ஏனெனில், தமது இரத்தத்தினாலே அவர் எல்லா நாடுகளிலிருந்தும் மக்களைக் கிரயம் கொடுத்து வாங்கி அவர்களை தேவனுக்கு ஆசாரியர்களாக்கினார் (வெளி. 5:9, 10). இந்த ஆசாரியர்கள் "தங்களது வாழ்வை அவருக்கு மட்டுமே ஒப்புக்கொடுக்கின்றனர்."[1] இவ்விதமாக, புதிய ஏற்பாடானது, ஆசாரியர்கள் என்றொரு பிரிவினரை உயர்த்துவதற்குப் பதிலாக, எல்லா கிறிஸ்தவர்களையும் - ஆண் மற்றும் பெண், இளையோர் மற்றும் முதியோர் அனைவரையும் - ஆசாரியர் களாக நோக்குகின்றது.*

## *புதிய ஏற்பாடு (எதிர் நிலையில்) மனிதர்களின் பாரம்பரியங்கள்*

*தனிப்படுத்தப்பட்ட துறவறக் குழுவை மேன்மைப் படுத்துவதற்காக, புகழ்பெற்ற மதங்கள், புதிய ஏற்பாட்டுக் கொள்கைகளைக் கைவிட்டு விட்டன என்று துயரத்துடன் கூறப்படுகிறது. மத குருக்கள், "சாதாரண" மக்களின் பாவங் களை மன்னிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளதாகக் கூறப் படுகிறது. இறையியலுக்கான ஒரு கத்தோலிக்க அகராதி என்ற நூலில், மன்னிக்கும் அதிகாரம்பற்றி ("நான் உன்னை விடுதலை செய்கின்றேன்"), "அதிகாரத்தின் மேல்படி" என்று விளக்க மளிக்கப்படுகிறது. மேலும் அந்த அகராதியில், கிறிஸ்துவினால் இந்த அதிகாரம், அப்போஸ்தலர்களுக்கும், அவர்களைத் தொடர்ந்து பின்வந்தவர்களுக்கும், ஆயர்களுக்கும், குருக்களுக் கும் மட்டுமே தரப்பட்டுள்ளது, மற்ற விசுவாசிகளுக்கு தரப்படுவதில்லை என்றும் கூறுகிறது. "சாதாரண" ஆதரவாளர் ஒவ்வொருவரும், ஒரு இருக்கையும், கவனித்துக் கேட்பதற் கான கம்பி வலையும் கொண்ட பாவ சங்கீர்த்தனத் தொட்டியிடம் ஆண்டுக்கு ஒருமுறையாவது பிரவேசிக்கக் கடமைப்பட்டவராயிருக்கிறார். (சில சமயத்தில் இது "உயிர்ப்பு நாள் கடமை" என்று குறிப்பிடப்படுகிறது). ஒருவர் இதை*

*நிறைவேற்றா விட்டால், அவர் மதத்திற்குப் புறம்பாக்கப்பட வேண்டும். எப்படியிருப்பினும், இறையியலுக்கான ஒரு கத்தோலிக்க அகராதி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளபடி, "திரெந்து சங்கம் கூடுவதற்கு முற்பட்ட காலம் வரைக்கும், பாவ மன்னிப்புகள் சபைகளில் வழங்கப்படவில்லை, சனிக் கிழமை மாலை ஆறு முதல் ஒன்பது மணி வரையிலும் அப்போஸ்தலர்கள், பாவ அறிக்கைகளைக் கேட்பதற்கு அமர்ந்திருந்தார்கள் என்று எண்ணுவது ஒரு முரண்பாடான தாகும்."*

## *பழைய ஏற்பாட்டு இணைச் சம்பவங்கள்*

*பழைய ஏற்பாட்டின் தனித்துவமான ஆசாரியத்துவமானது, புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவ வகையாகாது என்பதை நாம் ஏற்கனவே பார்க்க முடியும். இருப்பினும், ஆரோனுடைய ஆசாரியத்துவ ஊழியத்திற்கும், கிறிஸ்தவர்களின் ஆசாரியத்து வத்திற்கும் இடையில் இணையான விஷயங்கள் உள்ளன. அவற்றில் ஏழு விஷயங்களைக் கவனிப்போம்:*

*(1) கழுவுதல். ஆரோனும் அவரது மகன்களும் ஆசாரியர் களாக ஊழியம் செய்ய அனுமதிக்கப்படுவதற்கு முன்னதாக, அவர்களை, ''ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக சேரப்பண்ணி'' அவர்களைத் ''தண்ணீரினால்'' கழுவினர் (யாத். 29:4; 40:12). அதேபோல, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களாகின்ற மக்கள், ஞானஸ்நான தண்ணீரில் தங்கள் சரீரங்கள் "கழுவப்படுகின்றனர்" (அப். 22:16; 1 கொரி. 6:11; எபே. 5:26; தீத்து 3:5; எபி. 10:22ஐக் காண்க).*

*(2) தெளித்தல். ஆரோனும், அவர் மகன்களும் ஆசாரியர் களாக அனுமதிக்கப்படுவதற்கு முன்பு, ஒரு ஆட்டுக்கடாவின் இரத்தம் அவர்கள் மேல் தெளிக்கப்பட வேண்டியிருந்தது (யாத். 29:21). அதேபோல, இன்றைய நாட்களில் மக்கள் ஆசாரியர்களாக ஊழியம் செய்வதற்கு முன்பு, கிறிஸ்துவின் இரத்தம் உருவகமாக, அவர்களின் இருதயங்களில் தெளிக்கப் படுகின்றது (எபி. 10:22; 12:24; 1 பேது. 1:2).*

*(3) அபிஷேகம் செய்தல். ஆரோனும் அவர் மகன்களும், அவர்களின் சரீரங்களில் ஒரு விசேஷித்த சுகந்த வாசனையுள்ள "பரிசுத்த அபிஷேகத் தைலம்" ("நறுமணத் தைலக்காரனின் வேலைத் திறமையினால் கூட்டப்பட்டது") வார்க்கப்படும்*

*வரை அவர்கள் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களாகப் பரிசுத்தப் படுத்தப்படவில்லை (யாத். 30:23-30). ஒலிவ எண்ணெய் மற்றும் சுகந்த வர்க்கங்கள் (வெள்ளைப்போளம், கருவாப் பட்டை மற்றும் வசம்பு) ஆகியவை இதில் பயன்படுத்தும் விதம்பற்றி மோசேக்கு மிகக் குறிப்பான கட்டளைகள் தரப்பட்டன.*

*ஆசாரியர்களுடைய சரீரங்கள் சுகந்த வாசனையை வெளிப்படுத்தின (சங். 133:1, 2). அந்தப் பரிசுத்த அபிஷேக மானது, "தலைமுறை தோறும் நித்திய ஆசாரியத்துவத்துக்கு ஏதுவாயிருக்கும்" என்று கர்த்தர் கூறினார் (யாத். 40:15).*

*இதற்கு இணையான வகையில், கிறிஸ்தவர்களும் தங்கள் சரீரங்கள் ஞானஸ்நான தண்ணீர்களால் கழுவப்பட்டு, இயேசுவின் இரத்தம் தங்கள் இருதயங்களில் தெளிக்கப்பட்ட பிறகு, ஒரு அபிஷேகத்தைப் பெறுகின்றனர்: அவர்கள் தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு அருளுகின்ற பரிசுத்த ஆவியைப் பெறுகின்றனர் (அப். 5:32). பவுலின் கூற்றுப்படி, அவர்களைத் தேவனே அபிஷேகம் பண்ணுகிறார். "நமது இருதயங்களை" அவர் முத்திரையிட்டு, பரிசுத்த ஆவியான வரின் உத்தரவாதத்தைத் தருகிறார் (2 கொரி. 1:22).*

*(4) உடையணிதல். ஆரோனும் அவர் மகன்களும் "மெல்லியதாக நெய்யப்பட்ட" உடைகளை அணிய வேண்டும் என்று தேவன் குறிப்பாகக் கட்டளையிட்டிருந்தார் (யாத். 35:19; 39:1). இடுப்புத் தொடங்கி முழங்கால் மட்டும் உடுத்த மெல்லிய சணல் நூல் சல்லடங்கள் அவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டன. இவ்விதமாய் ஆசாரியர்கள் பரிசுத்த ஆராதனையின் போது "குற்றம் சுமந்து சாகாதபடி" அவைகளை அணிந்தனர் (யாத். 28:42, 43). "மெல்லிய சணல் நூலால் நெய்யப்பட்ட சல்லடங்கள்" - மற்ற உடைகளான "மெல்லிய திரித்த சணல் நூல், நீலம், இளஞ்சிவப்பு மற்றும் சிவப்பு நூலால் சித்திரத் தையல் வேலை செய்யப்பட்ட உடைகள்" - ஆகியவை "மகிமை மற்றும் அலங்காரத்திற்காக" அணிவிக்கப்பட்டன (யாத். 39:27-29; 28:40). மேலும், இவ்விதமாய் சரியாக உடுத்துவிக்கப்பட்ட ஆசாரியர்கள், அதேபோன்று மகிமை மற்றும் அலங்காரத்திற்காக, தலைப்பாகை யையும் பெற்றிருந்தனர் (யாத். 28:40). தேவனுடைய விசேஷித்த பிரதிநிதியானவர் இவ்விதமாக, தனது வாசனைத் தைலங்களால் மட்டுமல்லாது அவருடைய ஆடைகளினாலும் வசீகரத்தைப்*

*பெற்றிருந்தார். தங்களது வாழ்வைப் பரிசுத்தமாகவும், தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலாகவும் அளித்த மனிதர்கள் இவ்வித உடைகளை அணிந்து, தேவனுக்கு பரிசுத்த அலங்காரத்துடன் ஊழியம் செய்கையில் (2 நாளா. 20:21; சங். 29:2), அது கர்த்தருடைய திட்டத்தின்படியானதாக இருந்தது.*

*கிறிஸ்தவர்களின் சரியான, மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆடையலங்காரம், தன்னடக்கமுள்ளதாய் இருக்க வேண்டும், ஆனால் போதுமான ஆடையணிதல் என்பது கிறிஸ்தவப் பெண்மணிகள் நோக்கத்தையும் உள்ளடக்கியிருக்கிறது: அவர்கள் தகுதியான வஸ்திரத்தினாலும் (கிரேக்கம்: kosmio; 1 தீமோ. 2:10) தெளிந்த புத்தியினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும். கிறிஸ்தவப் பெண்மணிகள் தங்கள் சரீர மற்றும் புறம்பான அலங்கரிப்புக்கு அல்ல, ஆனால் உள்ளான, சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய அழியாத அலங்கரிப் புக்குத்தான் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் (1 பேது. 3:4). கிறிஸ்தவ ஆண்களுக்கென்று இதைப்பற்றிக் கட்டளை தரப்படவில்லை என்றாலும், தங்களின் மறுபகுதியாகிய பெண்களைப் போலவே, அவர்களும் தன்னடக்கமுள்ள ஆடையணிந்து, இருதயத்தின் உள்ளான அலங்கரிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளும்படி விடப்பட்டுள்ளனர். இவ்வித உடைகள் இருப்பின், நியாயத் தீர்ப்பின் நாளிலே அவர்கள் நிர்வாணமாய்க் காணப்பட மாட்டார்கள் (2 கொரி. 5:3). கிறிஸ்தவர்கள் அனைவருக்கும், உண்மையான நேர்த்தியான உடைகள் அழியாத அலங்கரிப் பல்ல, மாறாக உருவகமான நெய்த, சுத்தமும் பிரகாசமுமான வஸ்திரங்களாகிய நீதியுள்ள செய்கைகளே அழியாத அலங்கரிப்பாகும் (வெளி. 19:8). எல்லா கிறிஸ்தவர்களும் சாரமுள்ள ஆடைகள்மேல் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்:*

> *… உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மை யையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக் கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் (கொலோ. 3:12-14).*

*(5) நடையுடை பாவனை.* ஆரோனுடைய வீட்டில் சரியான பாவனையுள்ள ஆசாரியர்கள் மோசேயின் தெய்வீக அறிவுரைகளைப் பின்பற்ற ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். கர்த்தர் கட்டளையிட்ட பரிசுத்த ஆராதனையில் ஏதொன்றையும் சேர்ப்பது அல்லது ஒதுக்குவது என்பது எந்த ஆசாரியனுக்கும், ஆராயாமல் ஏற்றுக் கொள்ளும் ஒரு கருத்தாக இருக்கும் (உபா. 4:2; 12:32; நீதி. 30:6). அறியாமல் செய்த பாவங்களுக்கு, தேவனுடைய பிரமாணம் மன்னிப்பளிக்கும் உபாயம் ஒன்றைத் தந்தது (லேவி. 5:18; எண். 15:27, 28). இருப்பினும், துணிகரமான பாவத்தைப்பற்றி தேவன்,

> அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும், அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்திலிராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும். அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டைபண்ணி, அவர் கற்பனையை மீறினபடியால், அந்த ஆத்துமா அறுப்புண்டுபோகவேண்டும்; அவன் அக்கிரமம் அவன் மேலிருக்கும் (எண். 15:30, 31) என்றார்.

ஆரோனின் இரு மகன்களான நாதாப், அபியூ என்பவர்களின் கீழ்ப்படியாமையைப் படிக்கையில் நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. எலெயேசர், இத்தாமர் ஆகியோரை விட மூத்தவர்களான இவ்விருவரும் விசேஷமான கனத்தை பெற்றிருந்தனர். தங்கள் தகப்பன், மாமன் மற்றும் இஸ்ரவேலின் மூப்பர்கள் எழுபது பேருடன் இவர்கள் சீனாய் மலையின் பாதி அளவுவரை ஏறி நடந்து சென்றனர். ஒரு ஆச்சரியமான விஷயம் அங்கு நடந்தது:

> "... இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள்; அவருடைய பாதத்தின் கீழே நீலக்கல்லிழைத்த வேலைக்கு ஒப்பாகவும் தெளிந்த வானத்தின் பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. அவர் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகள்மேல் தம்முடைய கையை நீட்டவில்லை; அவர்கள் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக் குடித்தார்கள்" (யாத். 24:9-11; எண். 3:2ஐக் காண்க).

தனிப்பட்ட விதத்தில் கனமளிக்கப்பட்ட இவ்விருவரும், பின்னாளில், "அந்நிய அக்கினியை" கர்த்தருக்குச் செலுத்தினர் (லேவி. 10:1-2; KJV; 16:12ஐக் காண்க). இச்செயலைக் காணா

*திருக்கக் கர்த்தரால் முடியவில்லை; தகாத தன்னம்பிக்கை மிகுந்த அவ்விரு ஆசாரியர்களும் உயிரோடே கொளுத்தப் பட்டனர். தேவன், தமது ஆசாரியர்கள் பரலோகத்தின் அறிவுரையின் வழி நடத்தலுக்குள் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டானார்கள்.*

*நாதாப் மற்றும் அபியூ ஆகியோரின் உதாரணத்தை ஒரு தேவ எச்சரிப்பாகக் கிறிஸ்தவர்கள் பெற்றுள்ளனர் (ரோமர் 15:4). முதன்மைத்துவத்தை எடுத்துக் கொள்ளாதபடியும் (கிரேக்கம்: proago) அல்லது கிறிஸ்துவின் உபதேசத்தை விட்டு "தூரமாய்ப் போகாதபடிக்கும்" (கிரேக்கம்: parabaino) நாம் எச்சரிப்பு பெற்றுள்ளோம் (2 யோவா. 9). கிறிஸ்துவினிட மிருந்து வந்ததெல்லாம் இப்பொழுது இருபத்தேழு புத்தகங் களில் உள்ளபடியால், ஒரு மகத்துவமான ஆசாரியர், மத விஷயங்களில் "எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண மாட்டார்" (1 கொரி. 4:6). கிறிஸ்தவர்களுக்கான வழிநடத்தும் நியமம் என்னவெனில், தடை செய்யப்படாத ஏதொன்றையும் அவர் செய்யலாம் என்பதல்ல, ஆனால் அதிகாரம் பெறாத ஏதொன் றையும் அவர் செய்யவும் கூடாது. புதிய ஏற்பாட்டில் தடை செய்யப்படாத ஏதொன்றையும் செய்யலாம் என்பது, புனித நீர், உருவங்கள், தூபம், இசைக் கருவிகள், மெழுகுவர்த்திகள், ஜெபமாலைகள், மரியுவானா, நடனம், கர்த்தரின் பந்தியில் பொரித்த கோழி ஆகியவற்றை அனுமதிக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டின் ஆராதனையில் குறிப்பிட்டுள்ளவைகளை மட்டுமே செய்வதென்பது ஐக்கியம், அப்பம்பிட்குதல், ஜெபம், நன்றியுள்ள ஸ்தோத்திரம் (அப். 2:42; எபி. 13:15) ஆகியவை மட்டும் செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறது. புதிய ஏற்பாட்டு ஆசாரியர்களுக்கு, இசைக்கருவிகள் அல்லது தூபம் அல்லது பொறித்த கோழி இவற்றிற்கெதிரான விரோதம் ஒன்றும் இல்லாதிருக்கலாம், ஆனால் ஆராதனைபற்றி கர்த்தர் கூறியதோடு ஒன்றையாவது கூட்டிக்கொள்ள அவர்கள் துணிவதில்லை. நாதாப் மற்றும் அபியூ ஆகியோரின் பாவத்தை மறுபடியும் செய்ய அவர்கள் விரும்புவதில்லை.*

*(6) தூபம். பரிசுத்த ஸ்தலத்தில், பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் காலையிலும், மாலையிலும் சுகந்தவர்க்கங்களை எரிக்க வேண்டியிருந்தது, அது "உங்கள் தலைமுறைதோறும் கர்த்தருடைய சந்நிதியில் காட்டவேண்டிய நித்திய தூபம்" (யாத். 30:1-9) என்று அவர்களுக்கு கூறப்பட்டது. இந்த*

தூபவர்க்கம் (வெள்ளைப் போளம், குங்கிலியம், அல்பான் பிசின் மற்றும் சுத்தமான சாம்பிராணி கலந்தது) - சுத்தமும் பரிசுத்தமுமானதாய் (தைலக்காரன் செய்கிறதுபோல) பரிமளமேற்றப்பட்டு, பொடியாக்கி, பிறகு எரிக்கப் பட்டது - அப்போது அது நறுமணப் புகையை எழுப்பும். இது, "நான் உங்களைச் சந்திக்கும் ஆசரிப்புக் கூடாரத்தில்" வைக்கப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறினார் (யாத். 30:34-36). "இது உனக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.'' குறிப்பிட்ட அந்தக் கந்தவர்க்கங்களின் கலவை கர்த்தரை ஆராதிக்கும் போது மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் "தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போவான்" (யாத். 30:37, 38).

பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தின் இவ்விதமான தூபங்காட்டுதல் புதிய ஏற்பாட்டில் முற்றிலும் இல்லாதிருக் கிறது. இருப்பினும், இதற்கிணையான காட்சியாக, கிறிஸ்தவர் கள் தங்கள் பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே காலையும், மாலையும் ஜெபங்களை மகா தேவனுக்குச் செலுத்துகின்றனர் (வெளி. 5:8; 8:3, 4).

(7) பலிகள். ஆரோனின் ஆசாரியத்துவத்தில் பலி செலுத்துதல் என்பது மிக முக்கியமான செயலாக இருந்தது (லேவி. 1-7ஐக் காண்க). பலி பீடத்தில் எருதுகள் மற்றும் கடாக்களுடன் நொறுங்குண்ட ஆவிகளும், வருந்துகின்ற இருதயங்களும், சுத்தமான ஜீவியமும் மற்றும் கீழ்ப்படிதலும் சேர்ந்திருக்கவில்லையென்றால், அவர்களின் பலி தேவனுக்கு அருவருப்பானதாயிருக்கும் (சங். 40:6; 51:17; 1 சாமு. 15:22; ஏசா. 1:11; எரே. 6:20; 7:22, 23; ஆமோ. 5:22; மீகா 6:6-8). சரியான நடக்கை மற்றும் வாழ்க்கைமுறைகள் இணைந்ததாய், தேவனுடைய உடன்படிக்கையைக் காத்துக் கொள்ளுகையில், அவர்களின் பலிகள் சுகந்த வாசனையுள்ளதாய், இந்த அண்டம் முழுவதற்கும் தேவனாயிருப்பவருக்கு சந்தோஷமளிக்கக் கூடியதாய் இருந்தது.

மிருக பலிகளைத் தேவன் கட்டளையிட்டிருந்தபோதும், எல்லாக் காலத்திலும், "காளை வெள்ளாட்டுக்கடா இவைகளு டைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாது" (எபி. 10:4) என்பதை அவர் அறிந்திருந்தார். ஆயினும், ஆட்டுக் குட்டிக்கு ஒப்பாக, மரியாளின் இருதயத்தின் கீழாக ஒரு மனித சரீரம் ஆயத்தம் பண்ணப்பட்டு, பின்னால் அது உலகத்தின்

*பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (எபி. 10:5; யோவா. 1:29) என்று அறிவிக்கப்பட்டது. காலம் நிறைவேறின போது, "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே" இயேசு "தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கிப் போட்டார்" (எபி. 9:12, 26). அவரது பலியானது அன்றாடமோ அல்லது ஆண்டுக்கொருமுறையோ செலுத்தப் படவில்லை, அப்படியிருந்தால் உலகம் உண்டானது தொடங்கி அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருந்திருக்கும். மாறாக, அவர் ஒரே தரம் செலுத்திய பலியானது எல்லாக் காலங்களிலும், தேவனுக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் பலனளிப்பதாய் உள்ளது (எபி. 5:9; 9:15).*

*கிறிஸ்தவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும் பலியில் ஆடுகளும், கன்றுக் குட்டிகளும் நீக்கிப் போடப்பட்டன. புதிய ஏற்பாட்டின் பூரணப் பிரமாணமானது (யாக். 1:25) கிறிஸ்தவர் களை, "புறம்பானதல்ல மாறாக, 'ஆவிக்கேற்ற' பலிகள்" (1 பேது. 2:5) செலுத்தும்படியாகவே அழைக்கின்றது. அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியே ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கிறிஸ்தவ பலியாகும் (எபி. 13:15). மேலும், தேவையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கும்படியாக பிரியமான பலியாக பணம் அளிப்பதும் ஒரு பலியாக, புதிய ஏற்பாட்டில் அட்டவணைப் படுத்தப் பட்டுள்ளது (பிலி. 4:18). மேலும், ஒருவர் தமது சொந்த சரீரத்தை - மரித்த பலியாக அல்ல, ஆனால் ஜீவபலியாக - பயன்படுத்துவது கிறிஸ்தவர்களின் புத்தியுள்ள ஆராதனையாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது (ரோமர் 12:1).*

## முடிவுரை

*புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஆவியின் செய்தி எவ்வளவு அழகாயுள்ளது! பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் கட்டப்பட்ட நிருபங்கள் கிறிஸ்தவர்களை, இருதயத்திலும் மற்றும் வாழ்க்கையிலும் மேன்மையான ஊழியம் செய்யும் ஆசாரியர்களாக உயர்த்துகின்றன. பரலோகத்தின் திட்டங் களுக்கு காரணகர்த்தாவாயிருந்து அவைகளை எப்பொழுதும் மனிதருடைய நன்மைக்காகவே அபிஷேகம் செய்கின்ற அவருக்கே மகிமையும், வல்லமையும், கனமும் என்றென்றும் உண்டாவதாக.*

## குறிப்புகள்

[1]C.G. *வில்க் மற்றும்* C.L. *வில்லிபால்டு கிரிம், புதிய ஏற்பா ட்டின் ஆங்கில-கிரேக்க அகராதி, 12ம் பதிப்பு, மொழிபெயர்ப்பு மற்றும் திருத்தம் ஜோசப்* H. *தயெர் (கிரான்ட் ரேப்பிட்ஸ் மிச்சிக்கன்: ஜோன்டெர்வன் வெளியீட்டு நிலையம், 1973), 298. (*"*hiereus*" *என்ற பதிவில் காண்க.)* [2]மேலே கண்டதிலேயே (Ibid). *("hierateuma" என்ற பதிவில் காண்க).*